சிகிச்சை உதவி மருத்துவர்களும், அறுவை சிகிச்சை மருத்துவர்களும் கீழ்க் காணும் ஈட்டுப் படியைப் பெறுவதற்கு தகுதியுடையவர் ஆவர் :—

(1) நகராட்சி பகுதிகளிலும், ஆரம்ப சுகாதார நிலையங்களிலும் பணி யாற்றும் மருத்துவர்கள் நீங்கலாக, பிற இடங்களில் (rural areas) பணி யாற்றுவதற்கு மாத மொன்றுக்கு 75 ரூபாய் சிறப்பு ஈட்டுப்படி வழங்கப்படு கிறது.

(2) மருத்துவ அதிகாரி எந்த அரசு மருத்துவ நிலையத்தில் பணி யாற்றுகிறாரோ அந்த மருத்துவ நிலையத்திலிருந்து 5 மைல் தொலைவிற்குள் அல்லது 8 கிலோ மீட்டர் தொலைவிற்குள் பதிவு பெற்ற மருத்துவர்கள் ஒருவர் அல்லது பலர் தனிப்பட்ட முறையில் மருத்துவராகத் தொழில் புரியக்கூடிய அத்தகைய வட்டாரங்களில் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றுபவர் கள் நீங்கலாக, மற்றவர்களுக்கு வரையறுத்த தனிப்பட்ட முறையில் மருத்துவ தொழில் புரிதல் கட்டுப்படுத்தப்பட்டதற்காக மாதமொன்றுக்கு ரூபாய் 75 ஈட்டுப்படி வழங்கப்படுகிறது.

(3) ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும் மருத்துவர்களுக்கு மட்டுமே ஏனைய ஈட்டுப்படி வழங்கப்படுவதால் ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றும் மருத்துவ அதிகாரிகளுக்கு 125 ரூபாய் மொத்த ஈட்டுப்படி வழங்கப்படுகிறது.

(உ) இவை எதுவும் சிறப்புப் பணி எதற்காகவும் வழங்கப்படவில்லை.

Sexually Transmitted Diseases.

*98. *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU D. V. D' MONTE) : Will the Hon. the Minister for Health be pleased to state :—

(*a*) whether the Government are aware of the increase in Sexually Transmitted Diseases in the City; and

(*b*) if so, the steps proposed to be taken to control these diseases?

பாலுறவால் நோய்கள்.

திரு. கே. எஸ். கணபதி (திரு. டி. வி. டி'மாண்டி சார்பில்) : மாண்புமிகு மக்கள்-நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் பின்வரும் வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) சென்னை மாநகரில், பாலுறவால் பரவும் நோய்கள் பெருகி யிருத்தலை அரசு அறியுமா ?

(இ) ஆம் எனில், இந்த நோய்களைக் கட்டுப்படுத்த எடுக்கக் கருதி யுள்ள நடவடிக்கைகள் யாவை ?

1975 நவம்பர் 10]

(பிற்பகல் 4-20)

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, (அ) ஆம்.

(இ) மருத்துவக் கல்வி இயக்குநர் பால்வினை நோயியல் ஆலோசனைக் குழு ஒன்றை அமைத்துள்ளார். A group to discuss the ways and means of dealing with the V.D. diseases among the public அக் குழு தெரிவித்துள்ள பல்வேறு பரிவுரைகளை அவர் ஆய்வு செய்து வருகிறார்.

திரு. கே. எஸ். கணபதி : கொல்லிமலைப் பகுதியிலே வாழும் 10 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கும் இந்த நோய் ஏற்படும் அறிகுறிகள் தெரிகின்றன என்ற செய்தி உண்மையா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அதுபற்றி முழு விவரம் தெரியா விட்டாலும், அப்படிப்பட்ட நிலைமை பரவலாக இருக்கின்றது என்ற செய்தி அரசுக்குத் தெரியும். அண்மையில் நாமக்கல் மருத்துவ மனையிலே இந்த நோய் சம்பந்தமாக பயிற்சி பெற்ற ஒரு மருத்துவரை நியமித்து அவர்கள் மூலமாக சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.

THIRU K. S. ABDUL WAHAB : Sir, it is mentioned here that the disease is on the increase. I want to know statistical figures for three or four years.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பால்வினை நோய்க்கு ஆளானவர்கள் எளிதில் வெளியில் சொல்வதில்லை. மருத்துவர்களிடம் கூட வெட்கப்பட்டுச் சொல்வதில்லை. நம் நாட்டைப் பொறுத்தவரையில், இது ஒரு குற்றத்தின் காரணமாக ஏற்பட்ட விளைவு என்ற எண்ணம் இருப்பதால்—உண்மையாகக் கூட இருக்கலாம்—வெளியில் சொல்ல முன்வராத காரணத்தால், அந்த நோய் கண்டவர்களுடைய சரியான புள்ளிவிவரத்தை அறுதியிட்டுச் சொல்ல இயலாது. மக்கள் அந்தச் சிகிச்சைக்கு வரலாம் என்று ஊக்கப்படுத்துவதன் மூலமாக பெரும்பாலோருக்கு இந்த நோயைக் குணமாக்கலாம்.

திரு. சி. வி. ராஜகோபால் : 'வெனிரியல் டிசீஸ்' ஏறக்குறைய சென்னையிலும், சென்னையையொட்டிய பகுதிகளிலும் அதிகமாகப் பரவுகிறது என்று கூறுகிறார்கள். ஆனால் சிலபேர் இதைப் பற்றிக் கூறுகிறபோது, இது ஒரு 'லேடீஸ் டிசீஸ்' என்று கூறுகிறார்கள். லேடீஸ்-இட மிருந்து தொத்து வியாதியாக இது பரவுகிறது என்று கூறுகிறார்கள். அப்படி இருக்குமாயின்

"லேடீஸ் டிசீஸ்" என்று மற்றவர்களுக்குப் பரவும் இந்த 'வெனிரியல் டிசீஸ்'-ஐத் தடுப்பதற்கு முன்ஜாக்கிரதையாக ஏதாவது நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இந்த பால்வினை நோய் ஆண், பெண்ணோடு கொள்ளுகின்ற உறவினாலே ஏற்படாது. சில இடங்களில் யாரோ கொள்ளுகிற தவறான தொடர்பு காரணமாக, ஒருவரிடமிருந்து இன்னொருவருக்குப் பரவுகிறது. அதுவும் பெண்களாலே தான் பரவுகிறது என்று சொல்ல முடியாது. ஒருகாலத்திலே, சமுதாயத்திலே இருந்த அமைப்பிலே, ஒரு தொழில் முறையிலே, அப்படிப்பட்ட பழக்கத்திற்கு ஆளாகி இருந்தவர்கள் இந்த சாபக்கேட்டுக்குக் காரணமாக இருந்தார்கள். அவர்களிடமிருந்து மற்றவர்களுக்குப் பரவுகிறது. சாதாரண குடும்பப் பெண்களுக்கேகூட கணவன் மூலமாக இந்த நோய் பரவுகிறது. யார் பொறுப்பு என்பதற்கு, இந்த நோய் வந்தவர்கள் தவறுதலாக யாரிடத்திலோ தொடர்பு கொண்டுள்ளனர், அதன் நிமித்தம் தான் வந்தது என்று சொல்வதைத் தவிர, வேறு யாரிடத்திலும் பழியைப் போட்டு தப்பித்துக்கொள்ள முடியாது.

THIRU P. R. THOMAS : Hon. Deputy Chairman, Sir, I would like to know whether it is due to prostitution or immoral traffic in the country, and if so, what steps are proposed to be taken to prevent it.

THE HON. THIRU K. ANBAZHAGAN : I do not know the difference between prostitution and immoral traffic. Both are more or less the same and it is according to their own convenience.

Prohibition of Dowry.

*99. *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU D. V. D' MONTE) : Will the Hon. the Minister for Revenue be pleased to state :

(*a*) the steps taken by the Government to enforce strictly the Dowry Prohibition Act, 1961 (Central Act No. 21 of 1961); and

(*b*) whether the Government have conducted any survey to ascertain the evil practices resorted to in the name of Dowry in the State?